# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



# நகர் ஊரமைப்புத் துறை
## நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை : திரு ரா.செல்வராஜ். பி.இ.,

ந.க.எண். 901/2015 கோம 3

திருவள்ளுவர் ஆண்டு 2048,
ஸ்ரீதுன்முகி வருடம், தை ,
நாள் : 02.2017

பொருள் : கட்டிடம் - நகர் ஊரமைப்புத் துறை – கோயம்புத்தூர் மண்டலம் - கோயம்புத்தூர் மாவட்டம் - பேரூர் வட்டம் - ஆலாந்துறை பேரூராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்கள்.584/1 மற்றும் 585/2ல் 10562.00சமீ பரப்பளவு இடத்திற்கு மனை ஒப்புதல் மற்றும் அம்மனையில் தரை + மூன்று தளங்கள் கொண்ட 10306.55 ச.மீ பரப்பு கொண்ட உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட தி/ள். SAI UVR PROPERTIES PVT LIMITED–ன் கட்டிட வரைபடங்களுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

அனுப்பப்பட்டது
22 FEB 2017

பார்வை :
1) செயல் அலுவலர், ஆலாந்துறை பேரூராட்சி கடிதம் ந.க.எண்.28/2015 நாள். 18.02.2015.
2) மனுதாரர் தி/ள்.SAI UVR PROPERTIES PVT LIMITED என்பவரது விண்ணப்பம் நாள்.11.03.2015.
3) தலைமை பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, சென்னை 35, அவர்களின் கடிதம் எண். NPTI/44210/2014, நாள். 06.05.2015
4) முதன்மை தலைமை வனபாதுகாவலர், வனத்துறை, சென்னை 15 அவர்களின் கடிதம் மூ.மு.எண். TS4/466/2015, நாள். 15.06.2015
5) துணை இயக்குநர்(பொ), புவி மற்றும் சுரங்கத்துறை, கோயம்புத்தூர் 43 அவர்கள் கடிதம் எண். 801/2014/Mines, நாள். 20.11.2014
6) Extract of the subject No. 14 of the Minutes of 54th HACA Meeting held on 30.12.2015.
7) நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ), சென்னை அவர்களது நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண். 24217/2015பிஏ1, நாள். 07.11.2016.
8) அரசாணை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 28.3.2012
9) இவ்வலுவலக கேட்பு கடிதம் நாள். 16.11.2016.
10) மனுதாரர் கடிதம் நாள் 25.01.2017 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள். 30.01.2017)

*******

## உத்தரவு

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், ஆலாந்துறை பேரூராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.584/1 மற்றும் 585/2ல் 10562.00சமீ பரப்பளவு மனை இடத்திற்கு **‘ABCDE’** என எல்லையிட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் கீழ்க்கண்டவாறு தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் அமைகிறது.

| Block No | Area in sq.m | | | | Head room $m^2$ | Portico $m^2$ | No. of Dwellings | Total FSI area $m^2$ | Total Non FSI Area $m^2$ | Total Area $m^2$ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Ground floor | First floor | Second floor | Third floor | | | | | | |
| 1. | 80.83 | 41.22 | - | - | 12.62 | 14.45 | 5 | 610.25 | 135.35 | 745.60 |
| 2. | 77.91 | 35.80 | - | - | 13.11 | 13.50 | 6 | 682.26 | 159.66 | 841.92 |
| | 76.60 | 36.35 | | | 13.01 | 14.99 | 6 | 677.70 | 168.00 | 845.70 |
| 3. | 74.93 | 36.40 | - | - | 13.39 | 15.95 | 6 | 667.98 | 176.04 | 844.02 |
| 4. | 978.13 | 978.13 | 978.13 | 978.13 | 59.48 | - | 59 | 3912.52 | 59.48 | 3972.00 |
| 5. | 665.51 | 665.51 | 665.51 | 665.51 | 35.43 | - | 39 | 2662.04 | 35.43 | 2697.47 |
| 6. | 318.42 | 318.42 | 307.89 | 149.07 | 26.15 | - | Service building | 1093.80 | 26.15 | 1119.95 |
| | | | | | | Total | 121 | 10306.55 | 760.11 | 11066.66 |

| | | |
|---|---|---|
| மனையின் பரப்பு | : | 10562.00 சமீ (அ) 113691 ச.அடி. |
| உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டிடபரப்பு | : | 10306.55சமீ. |
| P.C. | : | 38.65% |
| F.S.I. | : | 0.98 |
| வாகன நிறுத்துமிடம் | : | 84 கார் நிறுத்துமிடம் மற்றும் 56 இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் |

மேற்கண்ட உத்தேச பிளாக் 1 முதல் 6 முடிய உள்ள தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டிட வபைரடத்திற்கு **க.வ/ந.ஊ.இ.எண். 190/2016** என எண்ணிட்டு பார்வை 7-ல் காண் நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ), சென்னை அவர்களது நடவடிக்கைகள் கடிதம் மூலம் கட்டிட அனுமதி/திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, உத்தேச மனையிடத்திற்கு **'ABCDE'** என எல்லையிட்டு மனை ஒப்புதல் எண் **ம.வ/கோ.ம.எண். 8/2017** என எண்ணிடப்பட்டும், அம்மனையில் 10306.55சமீ பரப்பில் அமையும் உத்தேச தரை + 3 தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட தி/ள். SAI UVR PROPERTIES PRIVATE LIMITED-ன் கட்டிட வரைபடங்களுக்கு **க.வ/கோ.ம.எண். '5அ முதல் எ வரை/2017'** என எண்ணிடப்பட்டு பின்வரும் சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண். 1 முதல் 5 முடிய எல்லையிடப்பட்ட 1056.90சதுரமீட்டர் பொதுஉபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை தானப் பத்திர எண். 142/2017, நாள். 06.01.2017-ன்படி மனுதாரரால் ஆலந்துறை பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தினர் ஆலந்துறை பேரூராட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்
3. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
4. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

5. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைசான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
7. The provisions in the G.O.(Ms)No.17, Housing and Urban Development(UD4) (3) Department dated 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.
8. பார்வை 6-ல் காணும் HACA கூட்ட முடிவின்படி HACA decided to recommend the proposal of construction of Residential Apartments for clearance subject to the conditions imposed by the Agriculture Engineering, Forest and Geology & Mining Departments.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச Block -1 to 6 தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்வதாக இருந்தால் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டபடியும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்படவேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல் நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் 03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்பொழுது உத்தேச இடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
13. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய சட்டம் 1974, பிரிவு 25(Water Act)-ன்படி வாரிய இணக்கம்(consent) பெறப்பட வேண்டும்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
கோயம்புத்தூர் மண்டலம்.

7-2-17

7/2/17

**இணைப்பு** :
அங்கீகரிக்கப்பட்ட மனை ஒப்புதல்
ம.வ./கோம.எண். **8 /2017** மற்றும்
கட்டிட வரைபடம் **க.வ./கோம.எண். 5'அ முதல் எ வரை'/2017** — இரண்டு தொகுப்பு வரைபடங்கள்

**பெறுநர் :**

தனி அலுவலர் /செயல் அலுவலர்
ஆலாந்துறை பேரூராட்சி
பேரூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**நகல்** :

1. நகர் ஊரமைப்பு ஆணையர்,
   807. அண்ணாசாலை,
   சென்னை-2.
2. Thiru. Sathiskumar Janakiraman, Director,
   SAI UVR PROPERTIES PVT LTD
   # F1, SAIRATAN 183, Dharga Road,
   Pallavaram,
   Chennai-43

# 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்

## 201 – வது பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமம்

# ஆலாந்துறை பேரூராட்சி அலுவலகம்

### முன்னிலை: திருமதி. எம்.ஆர்.சரஸ்வதி

ந.க.எண்:48 /2017

தேதி: 25.05.2017

கட்டிட உரிமம் எண்: 3/2017–2018

பொருள் : கட்டிட உரிமம் –ஆலாந்துறை பேரூராட்சி – க.ச.எண்.584/1. 585/2ல் 10562 சமீ கொண்ட இடத்தில் புதியதாக கட்டிடம் கட்டுதல் – அனுமதி வழங்கி உத்தரவு – வழங்குதல் – தொடர்பாக

பார்வை : 1. M/s, Sai UVR Properties Private Limited அவர்களின் 11.03.2015 ஆம் தேதிய விண்ணப்பம்
2. சென்னை நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் நக.எண்.24217/2015 பிஏ1 நாள் 7.11.2016
3. நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு) கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் நக.எண்.901/2015 /கோ.ம.3 நாள் 7. 2.2017

உத்தரவு :

கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் வட்டம் ஆலாந்துறை பேரூராட்சிக்குப்பட்ட க.ச.எண்.584/1. 585/2 ல் 10562 சமீ இடத்தில் மேற்கண்ட உத்தேச பிளாக் 1 முதல் 6 முடிய உள்ள தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.190/2016 என எண்ணிட்டு பார்வை 2–ல் காண் நகர ஊரமைப்பு ஆணையர் (பொ), சென்னை அவர்களது நடவடிக்கைகள் கடிதம் மூலம் கட்டிட அனுமதி / திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, உத்தேச மனையிடத்திற்கு "ABCDE" என எல்லையிட்டு மனை ஒப்புதல் எண் ம.வ/கோ.ம.எண்.8/2017 என எண்ணிடப்பட்டும், அம்மனையில் 10306.55 சமீ பரப்பில் அமையும் உத்தேச தரை + 3 தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட தி/ள், Sai UVR Properties Private Limited –ன் கட்டிட வரைபடங்களுக்கு க.வ/கோ.ம.எண். "5அ முதல் எ வரை/2017" என எண்ணிடப்பட்டு பின்வரும் சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனையிடம் மற்றும் கட்டிட வரைபடம், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, 1920– ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 201 – வது பிரிவின் கீழ் இவ்வுத்தரவு தேதியிலிருந்து மூன்று வருடத்திற்குள் புதிய கட்டிடம் கட்டிக்கொள்ள அங்கீகரித்து அனுமதி

வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் உரிமம் கெடு முடிவதற்கு 7 (ஏழு) தினங்களுக்கு முன்னர் உரிய கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் இவ்வுத்தரவு தானாக ரத்தாகிவிடும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தணிக்கைக்குட்பட்டு அங்கீகாரம் வழங்கப்படுகிறது

நிபந்தனைகள்:

1. ஆலாந்துறை பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொதுஉபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை ஆலாந்துறை பேரூராட்சியிடம் இருந்து எழுத்த பூர்வ அனுமதி பெற்று பொது உபயோகத்திற்காக மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும்

2. உத்தேச பிளாக் 1 முதல் 6 தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்

3. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்

4. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்

5. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்வதாக இருந்தால் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்

6. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டபடியும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002–ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

7. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்

8. மனையில் அமையும் குடிநீர் மேல் நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்

9. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்

10. அரசாணை எண் 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் 03.11.2004–ன்படி செப்டிக் டேங்கில் “U” Trap அமைக்க வேண்டும்

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் பொழுது உத்தேச இடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் மற்றும் இவ்வாளையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்

13. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய சட்டம் 1974, பிரிவு 25 (Water Act)–ன்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்

14. இவ்வனுமதி பெற்ற கட்டிடம், கட்டி முடிக்கப்பட்ட தேதியை, கட்டிய வேலை முடிந்து பதினைந்து தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலமாகத் தெரியப்படுத்த வேண்டும்

15. சர்க்கார் நிலத்திலும் பொதுச்சாலைகளிலும் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது

16. இந்த உரிமத்தில் கண்ட கால அளவிற்குப் பிறகு, மனு செய்து உரிமம் பெறாமல் கட்டிட வேலை செய்யக்கூடாது.

17. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டிடங்களுக்கான உரிமம் புதுப்பித்து கொள்ள உரிய உரிமக்கட்டணம் செலுத்தி உரிம காலத்திற்குள் 7 (ஏழு) நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

18. அங்கீகாரம் பெறப்பட்ட வரைபடத்தில் மாறுதல் செய்ய வேண்டுமானால் மீண்டும் திருத்திய வரைபடங்கள் சமர்ப்பித்து முழு அங்கீகாரம் பெற்று கட்டிட வேலை செய்ய வேண்டும்.

19. விண்ணப்பதாரர் பெறப்பட்ட கட்டிட உரிமத்தையும், வரைபடத்தையும் கட்டிடம் கட்டுமிடத்தில் வைத்திருக்க வேண்டும். பேரூராட்சி அலுவலக அதிகாரம் பெற்ற அதிகாரிகள் நேரில் வந்து கேட்கும்போது காண்பிக்க வேண்டும்.

20. இக்கட்டிடம் 24.05.2020ம் தேதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பிரத்தியோகமாக அனுமதிக்கட்டணம் செலுத்தி அனுமதி பெற்றபின் மேற்கண்ட கட்டிட வேலையினை தொடர்ந்து செய்ய வேண்டும்.

21. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல

22. உரிமம் கட்டுப்பாட்டிற்கும் உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும் நகராட்சி சட்டத்திற்கோ அல்லது வேறெந்த சட்ட திட்டங்களுக்கு மாறாகவோ உரிமம் பெற்று இருந்தாலும் உண்மைகளை மறைத்து தவறான வழியில் உரிமம் பெற்று இருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்படும்

23. கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை பொதுப்படையில் விடாமல் உரிமைதாரர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி அப்போதைக்கப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

24. மனைப்பிரிவிற்கு தேவையான வசதிகள் யாவும் மனைப்பிரிவு நில உரிமையாளரால் செய்து கொடுக்க வேண்டும். இந்த நிலப்பரப்பில் உரிமையாளரால் விதிகளின்படி தேவையான அனைத்து வசதிகளையும் செய்யாததால் தேவையான வசதிகளை செய்ய விகிதாச்சார முறையில் விண்ணப்பதாரர் செலுத்தியுள்ள இத்தொகை போதவில்லையெனில் கூடுதலாக இப்பேரூராட்சியில் நிர்ணயம் செய்யப்படும் தொகையினை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும்.

25. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள அனைத்து மனையிடத்தின் சொந்தகாரரும் தொகையை செலுத்திய பின்னரோ அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டியுள்ளதால் அலுவலகத்தில் இருந்து இவ்வசதிகளை செய்யும் வரை தொகை செலுத்தியதை வைத்து உரிமை கொண்டாடக்கூடாது.

26. சமையலறையில் புகைப்போக்கி அமைக்க வேண்டும்.

27. முறையான வடிகால் வசதி அமைக்க வேண்டும்.

28. அனுமதி கோரும் இடம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு இருப்பினும் வில்லங்கம் ஏதாவது இருப்பினும் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.

29. மனைப்பிரிவில் அபிவிருத்திக் கட்டணம் செலுத்தி இருப்பினும் அப்பகுதியின் வளர்ச்சியை கணக்கில் கொண்டும் பேரூராட்சியின் நிதி வசதிக்குட்பட்டும், மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் படிப்படியாக வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படும். அடிப்படை வசதிகள் குறித்து தனியாகவோ, கூட்டாகவோ பேரூராட்சிக்கு எவ்விதத்திலும் எந்த ஒரு நிர்பந்தமும் செய்தல் கூடாது.

30. திடக்கழிவு மேலாண்மையினை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும்.

31. கட்டிடம் கட்டுமானம் மற்றும் இதர காலங்களில் செங்கல் மற்றும் இதர புகையூட்டும் பொருட்களினால் மற்றவர்களுக்கு இடையூறு செய்தல் கூடாது.

32. கட்டிடம், சாலையிலிருந்து 10 அடியும், மற்ற பக்கங்களில் சுற்றிலும் 5 அடியும் இடைவெளி விட்டு கட்டப்பட வேண்டும்.

33. அரசு ஆணை (நிலை) எண்.79 நகராட்சியின் நிர்வாகம் மற்றும் குடிநீர் துறை (ந.நீ) நாள் 16.06.2000 கீழ் உள்ள விதிமுறைகளுக்குட்பட்ட அபிவிருத்தி பணிகள் செய்ய இயலும். எனவே அக்கோரிக்கையினை முன்னிருத்தக்கூடாது.

34. மேற்படி மனைப்பிரிவு குறித்து வழக்குகள் இருப்பின் கோர்ட் தீர்ப்பு இறுதியாகும் வரைபடம் அங்கீகாரம் கோர்ட் தீர்ப்புக்கு பொருந்தாது.

செயல் அலுவலர்
ஆலாந்துறை பேரூராட்சி
கோயமுத்தூர்-641 101

பெறுதல்
Director
Sai UVR Properties Private Limited
கதவு எண் F1,183, "Sai Ratan
தர்கா ரோடு, பல்லாவரம்,
சென்னை

நகல் :
சம்மந்தப்பட்ட வரிவசூலருக்கு கட்டிடம் முடிவடைந்ததும் வரி விதிப்பிற்காக மாதாந்திர பட்டியலில் சேர்த்து அறிக்கை சமர்ப்பிக்க



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate